# இந்துசாதனம்

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிகை கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | ,, ரூ. | 8-00 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, ரூ | 9-00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-00 |
| ,, | அரைக்கலம் | ரூ. 4-50 |
| ,, | கால்கலம் | ரூ 3-00 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சுo. } யாழ்ப்பாணம்:—விபவ ஸு புரட்டாதி மீ உஉ, (1928 செப்டெம்பர் 17) திங்கட்கிழமை. { இலக்கம்—உஉ.


உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்த்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உo. அரைரூத்தலுக்கு ரூபா கo. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்

(M. 36.)

---

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்த தருக்கமுடிவை இதுவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானபிரகாசனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்கமுடிவு.
—57 பக்கங்களையுடையது, விலைசதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினோத்தரம்.
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) சி. சு. இராஜையன், மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) S. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

---

## இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்போண்டன்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றுப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித் தலைவர்.

(Q. 106.)

---

## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேன் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

---

## சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அநேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் அரிதஸ்கலிதமென்னும் ஓர்வித நோயினால் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினால் (Malaria fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீரசௌக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும் பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தர்கண்ட "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ரூத்தல் | மருந்து | ரூபா | 10 | 00 | வீ. பி. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ ,, | ,, | ,, | 5 | 00 | |
| ¼ ,, | ,, | ,, | 3 | 50 | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர், டக்டர் எம் என். பிள்ளை எ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் தீவிரமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது மேலும் எங்களிடம் அநேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்பது விபரமாக எழுதினால் எங்களால் தீர்க்க முடியுமானால் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது தீராதரோகமாயிருந்தால் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர் மலாய்நாடு முதலிய தொடுவாய்ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts. முத்திரையும் அனுப்பினால் விபரமாகப் பதிலெழுதப்படும்.

(Q 104)

---

## கௌரவ வேலர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணா 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(H 64)

---

## இன்னும் முதன்மை ஸ்தானமே!

நோவுத் தைலங்களென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனால் நோவைத் தீர்ப்பதிற் சிறந்தது என்று சொல்லக் கூடியது

## லிட்டில்ஸ் ஓரியென்டல்பாம்

தைலம்தான்.

43-வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று தலைவலி, நரம்புவலி, கீல்வாய்வு, இடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு, தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு நிச்சயமான சுறுக்கான தீங்கில்லாத தைலம் என்று ருசிக்கப்பெற்றது.




எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

(4—28) Little's Oriental Balm and Pharmaceuticals Ltd., Madras.

(Y. 61.)

சுன்னாகத்தில்
சைவக்குருக்கள் இருக்கிறார்.

வேதாரணியம் வடக்குத்தெரு ஸ்ரீமத் அப்பு ஐயாக்குருக்களவர்களின் இரண்டாவது புத்திரர் திருவாவடுதுறை ஸ்ரீமத் சோமசுந்தரக்குருக்களவர்கள் இந்து அநாதை சிஷ்யர்கள் பலரது கேள்விப்படி சுன்னாகத்திலே வைத்தியர் ஸ்ரீ வல்லிபுரமவர்கள் கிருகத்துக்குச் சமீபத்தில் வசிக்கிறார். இது அவர்களது சிஷ்யர்க்கும் மற்றவர்களுக்கும் வாசியாயிருக்கும்.

(Mis. 1294)


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞூ
புரட்டாதிமீ உஉ திங்கட்கிழமை.


## அரசினரின் அடாதசோதனை.

1

நமது இலங்கை அரசினர் தாம் பரிபலிக்கும் பிரசைகளின் சாரித்திரிய நிலைமை உள்ளபடி சிந்திக்கின்றிலரென்பது அரசினர் செயலால் இனிது அறியக்கிடக்கின்றது. இலங்கையில் ஒரு தக்க சர்வகலாசங்கம் இதுகாறும் இல்லாமையினால் கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்திற்கும், லண்டன் சர்வகலாசங்கத்திற்கும் இலங்கையிலிருந்து வருஷந்தோறும் பரீக்ஷைக் கட்டணமாகப் பல்லாயிரக்கணக்கான ரூபா இங்கிலாந்திற்குப் போய்ச்சேர, இலங்கை அரசினர் தாமும் இடையிடையே கீழ்த்தரக் கிளறிக்கற் பரீக்ஷை, நயாற்பகுதி புகையிரதப்பகுதிகளுக்குரிய உத்தியோக நியமனத்திற்காகிய பரீக்ஷை முதலாம் பரீக்ஷைகளை நடத்தி இங்குள்ள வாலிபரைச் சிரமப்படுத்துவதோடமையாது அவ்வாலிபருக்கும் பெற்றோர்க்கும் பெரும் பொருட்செலவையும் உண்டாக்கி விடுகின்றனர். அரசினரால் குடிசனங்களுக்கு நேரும் இந்த நஷ்டத்தைச் சட்டநிரூபணசபைப்பிரதிநிதிகளும் பத்திரிகைகளும் எடுத்துக்காட்டவும் அரசினர் அதனை அறியார்போலிருக்கின்றனர். சர்வகலாசங்கத்தார் நடத்தும் பரீக்ஷைகளுக்கும் அரசினர் நடத்தும் பரீக்ஷைகளுக்குமிடையேயுள்ளபேதமென்னவென்றால் சர்வகலாசங்கப் பரீக்ஷையில் திறமையுடையோரெல்லாருஞ் சித்தியடைய, திறமையற்றவர்களே சித்தியடையாதொழிவர்; அரசினர் நடத்தும் பரீக்ஷையிலெனிலோ, எத்தனைபேர் சித்தியடைந்தாலும் அரசினர் தமக்கு வேண்டிய சிலரினுஞ் சிலரைமாத்திரந் தெரிந்துகொண்டு ஏனையோர் சித்தியடைந்தவராயினும் அவர்களை ஒதுக்கிவிடுவர்; அப்படிப்பட்டவர்களுக்கும் சித்தியடையாதவர்களுக்கும் பேதமில்லையாம். இன்னொருபேதமென்னவென்றால் சர்வகலாசங்கப் பரீக்ஷையிற் பிரவேசிப்போர் தங்கள் தங்கள் ஊர்களிலிருந்துகொண்டே பரீக்ஷையிற்பிரவேசிக்கலாகும்; அரசினர்ப் பரீக்ஷையிற் பிரவேசிக்க விரும்புவோர் இலங்கையின் எந்தக்கோணத்திலிருப்பினும் பரீக்ஷையின்பொருட்டுக் கொழும்புமாநகரத்திற்குச் சென்று தங்கி மீளவேண்டும். அரசினர் நடத்தும் ஒரு பரீக்ஷையை உதாரணமாக எடுத்துக்காட்டி விளக்கின் அதனால் வாலிபர் அடையுங் கஷ்ட நஷ்டங்கள் நன்கு விளங்கும்.

இலங்கைத் துறைமுகப்பகுதிக்குரிய கிளார்க்மார் தேவையெனக்கண்டு அரசினர் இன்னுஞ்சில தினங்களுள் ஒரு பரீக்ஷை வைக்கப்போகின்றார்கள். இப்பொழுது தேவையான உத்தியோகத்தர்கள் 8 அல்லது 9 பேராம். ஆங்கிலம் எட்டாந்தரத்திற்குச் சரியான ஸ்கூல் லீவிங்சேர்ட்டிபிக்கற் பரீக்ஷையிற்சித்தியடைந்தவர்களும் மேற்பட்ட பரீக்ஷையிற் சித்தியடைந்தவர்களும் இப்பரீக்ஷைக்கு அருகரான அதிகாரிகள் என்று பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். ஆங்கிலம் எட்டாந்தரப் பரீக்ஷையிலும் அதற்கு மேற்பட்ட பரீக்ஷைகளிலுஞ் சித்தியடைந்து, உத்தியோகமின்றி, முயற்சி எதுவுஞ் செய்வதற்கு வகைதெரியாது, பெற்றோர்க்குப் பாரமாய்ச் சோம்பேறிகளாய்த் தீ சிந்தனைக்கு வாசஸ்தானமாய், பொழுது போகாமையினாற் சீட்டாடியும் வட்டாடியும் வீண்செயல் புரிந்தும் முயற்சியுடையார்க்கு இடையூறுசெய்து திரிபவர்களாய்க் கடைபிணமாய்ப் பூமிக்குப் பாரமாய், ஆயிரக்கணக்கான வாலிபர் இந்த இலங்கையிற் சஞ்சரிக்கின்றார்கள். மக்களுடைய உழைப்பை உண்டேதான் சாகவேண்டுமென்னும் ஆயுள்கொண்ட தகப்பன்மாரும், மகனுடைய விவாகத்தைப்பார்த்து மருமகளையுங்கண்டு தான் சாகவேண்டுமென்ற ஆவல்கொண்ட தய்மாரும் இந்த இலங்கையில் எண்ணிறந்தோர் இலவுகாகதுங் கிளிபோல் இருக்கின்றார்கள். மேலே சொல்லப்பட்ட தன்மையான ஒரு பரீக்ஷை நடக்கப்போகின்றதென்ற விளம்பரத்தைக் கண்டமாத்திரத்தே இந்த வாலிபர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத்தான் குறித்த உத்தியோகபதவி நிச்சயமாகக் கிடைக்கும், நாங்கள்தான் பரீக்ஷையில் அதிக திறமையோடு சித்தியடைபவர் என்று தனித்தனி தம் பெற்றோர்க்குச் சொல்லிப்புலப்படுத்த, பெற்றோரும் இவர்கள் ஆசைவார்த்தையை மெய்யென நம்பி ஒரு பெருந்தொகைப் பணத்தை அநியாயமாக யாதும் பயனின்றி இப்பிள்ளைகள் பொருட்டுச் செலவுசெய்வதற்கு உடன்படுகின்றனர். 8 அல்லது 9 பேர் தேவையாகவிருப்ப 800 அல்லது 900 வாலிபர் வரையில் இந்தப் பரீக்ஷையிற் பிரவேசித்தற்கு முயற்சி செய்வர். ஒருபிள்ளைக்குப் பரீக்ஷை விண்ணப்பவேதனம் ரூபா 5 இந்தப்பிள்ளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று மீண்டு வருவதற்கான புகைரதச் செலவும் மற்றும் பிரயாணச் செலவும் குறைந்தகணக்கு 15 ரூபாவென வைத்துக்கொள்வோம் கொழும்புக்குச் செல்வதால் சட்டை தொப்பி முதலிய உடைகளைப் புதிதாகத் தைப்பித்துக் கொள்வதற்கு ரூபா 30 என்று வைத்துக்கொள்வோம், விடுதிச்செலவும் ரூபா 10 என வைத்துக்கொள்வோம். இவர்களுட் சில பிள்ளைகளுக்குத் துணையாகத் தமையன் தகப்பன் என்னுமிவர்களுள் ஒருவராயினுஞ் செல்வதுண்டு, உடன் செல்லும் இவருக்காகிய செலவை இங்குச் சேர்க்காது விடுவோம், எனவே ஒருவனுக்குங் குறைந்தகணக்கு 60 ரூபா இப்பரீக்ஷையின்பொருட்டுச் செலவாகின்றது. இந்த 60 ரூபாவில் கட்டண வேதனம் ரூ 5 புகைரதப்பிரயாணச்செலவு 12-50 இரண்டுஞ்சேர்ந்து ரூபா 17-50 அரசினரிடமே நேரிலுஞ் சுற்றிக்கொண்டுஞ் செல்கின்றது. 800 பிள்ளைகள் இப்பரீக்ஷையிற் பிரவேசிப்பின் 14000 ரூபாவரையில் அரசினரிடஞ் செல்லும். 32000 ரூபாவரையில் வியாபாரிமாரிடத்தும் பிறரிடத்தும் போய்ச்சேருகின்றது இங்ஙனமெல்லாஞ் செலவானபின் தெரிந்தெடுக்கப்படுவோர் 8 அல்லது 9 பேர் மாத்திரமாவர். ஒழிந்த 792 பேரும், தங்கள் பெற்றோர் தம்மை ஒறுத்தும் கடன்பட்டும் கொடுத்த பணத்தை அநியாயமாகச் செலவழித்துவிட்டுப் பழையபடி வீட்டிற்கு மீண்டுவந்து பூமிக்குப் பாரமாகவிருப்பவராவர். சீட்டாட வாண்ணாறு, அசிஷ்டாலாபச்சீட்டு (லொத்தர்) போடவொண்ணாதெனத் தடுத்துப் பிரமாணஞ் செய்திருக்கும் அரசினர் இப்படிப்பட்ட பரீக்ஷைகளைத் தாம வைத்து நடத்துவது எவ்வாறு. அரசினர் பிரசைகளுக்குச் செய்யும் இந்த நஷ்டத்தை ஆவசியகஞ் சிந்திக்கவேண்டும் இப்படிப்பட்ட பரீக்ஷைகளை அரசினர் எவ்வாறு நடத்தவேண்டுமென்பதை அடுத்த பிரசுரத்தில் எடுத்துக் கூறுவேம்.

## சிவஞான போதம்.

(இரண்டாம்பாகம்.)

வண்ணை, ஸ்ரீ வை. இராமநாதன் அவர்களால் அனுவதித்துப் பிரகடனஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 21-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—௪.

அந்தக்கரணமவற்றினொன்றன்றவை
சந்தித்ததான்மாசகசமலத்துணரா
தமைச்சரசேய்ப்ப அந்தவத்தைத்தே.

ஐந்தாம்பாடம்—உயிர் ஐந்துவிதமாயறியும்

உயிர், அந்தக்கரணம் முதலிய கருவிகளோடு கூடியே அறியும் என்பது பெற்றாம். இவ்வாறு அறிவது ஒரே விதமா அன்றிப் பலவிதமா என்பதை ஆராய்வாம்.

கருவிகள் உயிருக்குக் கண்ணாடிபோல் உதவும் என்று கண்டோம் காணுந் தன்மை, கண்ணாடியின் தன்மைக்கேற்ப மாறுதல்போல, கருவிகளின் தன்மைக்கேற்ப உயிர் அறிதலும வேறுபடும் இக்கருவிகள் எப்பொழுதும் ஒரேவிதமாகத் தொழிற்படுவதில்லை. கூடியும் குறைந்துமே தொழிற்படும். இக்கருவிகளைத் தத்துவம், தாத்துவிகம் என இரு பிரிவுபண்ணலாம். இவற்றுள் தத்துவங்கள் இவ்வுலகப்பொருள்களின் காரணபூதங்களாம். தாத்துவிகங்கள் மேற்சொல்லிய காரணமாகிய தத்துவங்களின் காரியங்கள் ஆகும். தத்துவங்கள் 36, தாத்துவிகங்கள் 60 ஆக கருவிகள் 96 [இந்த 96 கருவிகளைப்பற்றிய விவரம் பின் விளக்குவாம்] உண்ணிலைக் கருவிகளாகிய 36 தத்துவங்களிலும் புறநிலைக்கருவிகளாகிய தாத்துவிகங்கள் 60 இதிலும் சிலவே, உயிரின் அறிவு வேறுபாட்டிற்குக் காரணமாய்கிற்பன. ஈண்டு ஆராயவேண்டுவது சிறப்பு அறிவின் வேறுபாட்டிற்குக் காரணமாகிய கருவிகளையே.

வித்தியாதத்துவங்கள் ஏழில், புருடன் ஒழிந்த ஏனைய ஆறும் உயிருக்குப் பொது அறிவை உண்டாக்குவன பொது அறிவாவன, இது சுகம், இது துக்கம் என அறியும் அறிவேயாம். புருடன் ஒழிந்த வித்தியாதத்துவங்களுக்கு மேலாய சிவதத்துவங்கள் ஐந்தும், உயிரை அப்பொழுது அறிவின்கண் தூண்டுவனவன்றி வேறல்ல. ஆகையினால் சிவதத்துவம் 5, புருடன் ஒழிந்த வித்தியாதத்துவம் 6 ஆக 11 தத்துவங்களின் தொழிற்பாட்டை ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. எஞ்சிய தத்துவங்களின் தொழிற்பாட்டை ஆராய்வாம்.

36 தத்துவங்களில், முன் கூறப்பட்ட 11 தத்துவங்களும் நீக்கி, எஞ்சிய 25 தத்துவங்களில், பூதங்கள் ஐந்தும் தொழிற்படும்போது, தாத்துவிதங்களாய் விரியும். தன்மாத்திரைகள் ஐந்தும் அப்பூதங்களோடு உடனாய் அவற்றிற்கு வலியாய் மாத்திரம் நிற்கும். ஆகவே 25 தத்துவங்களில், மேற்கூறப்பட்ட பூதம் 5, தன்மாத்திரை 5 ஆகப் பத்தும் நீக்கி, மிகுதியாயுள்ள தத்துவங்கள் 15 ஆகும். அவை, ஆன்மதத்துவங்களின் பகுதிகளான கன்மேந்திரியங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, அந்தக்கரணங்கள் 4, வித்தியாதத்துவத்தில் உள்ளதும் முன் நீக்கிவைக்கப்பட்டதுமாகிய புருடன் 1 ஆக 15 ஆகும்

புருடதத்துவம், ஏனைய வித்தியாதத்துவங்களின் தொகுதியி லுள்ளதேயாம். ஏனைய வித்தியாதத்துவங்கள் கூடுதல் குறைதலினால் இப்புருடதத்துவம் தொழிற்படும்.

[உண்ணிலைக்கருவிகள் எனப்படுந் தத்துவம் 36. புறநிலைக்கருவிகள் எனப்படும் தாத்துவிகம் 60. இவைகள் இன்னதென்பதை விளக்கிப் பின் தாத்துவிகங்களின் தொழிற்பாட்டை ஆராய்வாம்]

உண்ணிலைக்கருவிகள் 3—ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம்.

(க) ஆன்மதத்துவம் 24.

- பூதம் 5—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்
- ஞானேந்திரியம் 5—சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம்
- தன்மாத்திரைகள் 5—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்
- கன்மேந்திரியங்கள் 5—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்
- அந்தக்கரணம் 4—சித்தம், மனம், அகங்காரம், புத்தி

ஆக 24. இதை, அசுத்ததத்துவம் எனவுங்கூறுவர்.

(உ) வித்தியாதத்துவங்கள் 7—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை

ஆக 7. இதை, சுத்தாசுத்த தத்துவமென்றுங் கூறுவர்.

(ங) சிவதத்துவம் 5—சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம். ஆக 5. இதை, சுத்ததத்துவம் என்றுங் கூறுவர்.

ஆக, மேலே கண்டபடி 24+7+5=36 தத்துவங்களாம்.

இனி, தாத்துவிகங்கள்:

பூதகாரியம் 25; எப்படியெனில்,

- பிருதுவியின் கூறு 5—மயிர், எலும்பு, தோல், நரம்பு தசை
- அப்புவின் கூறு 5—நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை
- தேயுவின் கூறு 5—ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்
- வாயுவின் கூறு 5—ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்
- ஆகாயத்தின் கூறு 5—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்
- வாயுக்கள் 10—பிராணன், அபானன், உதானன், வியானன் சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்
- நாடிகள் 10—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருஷன், குரு, சங்கினி
- வாஞ்நி 5—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம்
- வாக்கு 4—சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி
- குணம் 3—சாத்விகம், ராசதம், தாமசம்
- அகங்காரம் 3—தைசதம், வைகரி, பூதாதி

ஆக, மேலே கண்டபடி 25+10+10+5+4+3+3=60.

(இவைகளின் தொழிற்பாடு முதலிய விவரங்களை விரிந்த நூல்களிலும குருமுகமாகவும கேட்டுணர்க.)

தாத்துவிகங்களினால் அறிவு வேறுபாடாகுங் காரணங்களை ஆராய்வாம் வரும்.

## குமரேச சதகம். கஉ

விலை ந் தடக்கத்தகுவன இவைவேனல்.

அக்கினியை வாய்முந்து தர்ச்சனை வஞ்சம
யாளைவளர் பயிர்கொள் களையை [வளை
யஞ்சா விரோதிகளை யகைய முடையோ
டமிர்த்தியப் பெண்களார்ப்பைக் [கரை
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடி
கனவுசெய் யுந் திருடரைக் [மையைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பலிதையைக்
கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யகையுதா சினத்
விளைமூட்டி டுந் சண்டையை [னத
விடமேற கோரத்தை யன்றடக் குவதலான்
விஞ்சவிட லாகாது காண்
மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த போழக னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு
மலைமேவு குமரேசனே.

இ—ள்; (பற்றவேண்டாவிடத்துப் பற்றிய) நெருப்பையும் பெரியோரை மதியாது முறைமையின்றி முந்திப்பேசுந் தடிப்பையும், உள்ளொன்று புறம்பொன்றாக ஒழுகும் வஞ்சனையையும், வளருகின்ற செற்பயிர்முதலியவற்றின் விருத்தியைக் கெடுக்கும் களையையும் நிறைசெய்யப் படப்படாத பகைவர்களையும், நீதியின் முன்னவர்களையும், தியசருமங்களைச் செய்யும் பெண்களின் ஆரவாரத்தையும், தமக்குக் கைவர்த பேலைக்காரனையும், தாம் கொண்டுள்ள அடிமையையும், களவே தொழிலாகவுடையவர்களாகிய கள்வரையும், ஆழ்ந்த யோசனையைத் தருஞ் சஞ்சலத்தையும், கட்டுப்பாடில்லாத கன்னிகையையும், மேற்பட்டு வருகின்ற கோபத்தையும், உடம்பிற்குத் தீமையைத்தரும் நோயையும், ஒருவர் சபையில் எழுந்து பேசுந்தகாத வார்த்தையையும், தீவினைக்குக் காரணமாகிய சண்டையையும் விஷம், ஏறும் வேகத்தையும் உடனுக்குடன் அடக்குவதல்லாமல் மேற்பட விடவொண்ணாது, அழகிய மைதீட்டப்பெற்ற கண்களையுடைய குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியையும் தெய்வநாயகியையுந் திருமணஞ் செய்தருளிய பொழுதோடு கூடியவரே, மயிலேறி விளையாடு குகனே, புல்வயல்நீடு மலைமேவு குமரேசனே. எ—று.

பலிதை, பலித்தலையுடையவன், பக்குவப்பட்டவன், கன்னிகை. பலிதையென்பது கிழவியெனவும் பொருள்படும். எற்புழிக்கோடல் என்னும் யுத்திபற்றி இங்கே கன்னிகையெனக் கொண்டாம். விடமேறு கோரத்தையென்றது விஷத்தீண்டிய வழி, அவ்விஷம் உடம்பின்கண்ணேயேறும் வேகத்தையென்பதாம்.

## கால நிலை.

சென்ற செவ்வாய்க்கிழமை சிறிது மழை பெய்தது; மழைக்கோலம் இன்னமுங் காணப்படுகின்றது; மூன்றுநாட்சுரமெனப்படும் சுவாதசுரம் ஊரிற் பெரிதும் பரவியிருக்கின்றது.

## சிங்களப் பாடசாலைகளில் கல்விகற்கும் மகமதியப் பிள்ளைகள்.

குருநாக்கல் பகுதியிலுள்ள அரசினர் சிங்களப் பாடசாலைகளில் தமிழ் உபாத்தியாயர்களை நியோகித்து, அங்கு கல்விகற்கும் மகமதிய பிள்ளைகளுக்குத் தமிழ்க்கல்வி கற்பித்தாலொழிய மகமதிய பிள்ளைகள்பாடசாலைக்குவாராமையையிட்டு அவர்களுடைய பெயர்களை, மாதவிதம் தவறுசெய்பவர்களின் பெயர்களைப் பதியும் புஸ்தகத்தில் எழுதக்கூடாதென அப்பாடசாலைகளின் பிரதம ஆசிரியர்களுக்கு வித்தியாகர்த்தர் தெரிவித்திருக்கிறார்

## பள்ளிக்கூடச் சிறுமி நெரியுண்டாள்.

சென்ற 14ஆ வெள்ளிக்கிழமை சாவகச்சேரியிலுள்ள கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு சிறுமி வேறு பிள்ளைகளோடு கூட்டமாக கொற்மேல் என்னும் தெருவீதிவழியாகச் செல்லும் பொழுது விண்ஸோரிலுள்ள 'மெல்றன்' என்னும் தோட்டத்து மேற்பார்வைகாரனான மிஸ்ரர் D. J. மெயிற்லண்ட் ஒரு மோட்டாரதத்தைச் செலுத்திக்கொண்டு சென்றார். அச்சிறுமி ரதத்திற்கு முன் ஓடி மற்றப்பக்கத்தில்நின்ற தனது கூட்டாளியாரோடு சேர்வதற்கு எத்தனித்த பொழுது ரதம் அவளைத் தட்டி வீழ்த்தி நெரித்தது.

---

## ஆற்றில் மிதந்த பிரேதம்.

அவ்கிரியாவிலுள்ள அற்றனுகலு ஓயாவில் ஏறக்குறைய 18 வயதுடைய ஓர் இளம்பெண்ணின் பிரேதம் றவுக்கை மாத்திரம் அணிந்தபடி குப்புற மிதப்பதை வேர்னுன்டோ என்னுமொருவன் கண்டு அவ்வூர்த் தலைமைக்காரனுக்கு அறிவித்து, அவரை அழைத்துச்சென்று காண்பித்தனன். அது யாருடைய பிரேதமென்று தெரியவில்லை. அப்பெண் கர்ப்பவதிபோற் காணப்பட்டாளெனவும், அவளுடைய தலையில் காயமிருந்ததெனவும் தலைமைக்காரன் கூறினன். அவள் கொலைசெய்யப்பட்டிருக்கவேண்டுமென்று இருவர் பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

---

## நியாயவாதப் பரீட்சை.

ஏலவே நடந்தேறிய நியாயவாதப் பரீட்சையில் தமிழரில் மேலே சொல்லப்படுபவர் சித்தியெய்தியிருக்கின்றனர். தரணிக்குரிய 2-வது பரீட்சையில், (1) V. சுப்பராயர், (2) K. V. நடராசா, (3) T. பாலகிருஷ்ணன், (4) K. சுப்பிரமணியம் என்பவர்களும், தரணிமார்க்குரிய 3-வது பரீட்சையில், (1) V. கல்லசேகரம், (2) V. A. அழகைக்கோன், (3) J. S. கனகரத்தினம், (4) P. கனகசபை, (5) E. S. யேசுராசசிங்கம் என்பவர்களும், அத்துவக்காத்துக்குரிய 2-வது பரீட்சையில் (1) A. M. சரவணமுத்து, (2) M. சோமசுந்தரம் என்பவர்களும், அத்துவக்காத்துக்குரிய 3-வது பரீட்சையில் (1) P. தியாகராசா என்பவரும்சித்தியெய்தியிருக்கின்றனர். அத்துவக்காத்துக்குரிய 2-வது பரீட்சையில் தேறிய A. M. சரவணமுத்து என்பவருக்கு வித்தியாநிதிப்பரிசாக ரூபா 480 அளிக்கப்பட்டிருக்கிறது.

---

## நியாயவாதியின் அருந்தப்பு.

கட்டுக்காஸ்தோட்டையிலுள்ள புகைரதவீதிப்பாலத்திலிருந்து மகாவலிகங்கைக்குள் மிஸ்ரர் T. B. கொஸ்வத்தே என்னும் நியாயவாதி வீழ்ந்த பொழுது மரணமடையாது அதிசயிக்கக்கூடியவிதமாகத் தப்பிவிட்டார். பாலத்திற்கும் ஆற்றிலுள்ள நீருக்கும் இடைத்தூரம் 50 அடியாகும். அவர் மதுபானஞ் செய்தவராக அக்கோலம் காணப்பட்டார். தண்ணீரில் வீழ்ந்து தத்தளிக்கும் சத்தத்தைப் புகைரதப் பாதையில் வேலைசெய்துகொண்டுநின்ற கூலியாட்கள் கேட்டு அவ்விடம் சென்று அவரை மீட்டுவிட்டனர். ஆற்றின் அடியில் பாறைக்கற்களிருக்கின்றன. ஒரு அடி அல்லது இரண்டு அடி விலகி அவர் வீழ்ந்திருப்பரேல் உடனே இறந்திருப்பர். அவருக்கு அப்பொழுது ஆபத்தான காயங்கள் ஒன்றுமில்லை. கொஞ்சநேரத்தில் அறிவுவரப்பெற்றார் ஆனால் சாயந்தரம்வரையில் மறுபடியும் அறிவிழந்து ஆபத்தான நிலையிலிருக்கின்றனர். சிலநாட்களுக்குமுன் தெனுதனையிலுள்ள பொலிஸ்நீதிபதி முன்பாகக் குடிவெறிமயக்கத்தோடு சென்றாரென்னும் குற்றச்சாட்டுக் காரணமாக, அவரை நியாயவாதத் தொழிலினின்றும் ஏன் நிறுத்தக்கூடாதென்பதற்கு நியாயங்காட்டும்படி சுப்பிறீம்கோட்டாரால் அவருக்கு ஓர் கட்டளையும் இத்தருணத்தில் விடப்பட்டிருக்கிறது.

---

## புகைரதப் போக்குவரவுக்குக் கடல்பன்றி தடையாயிருந்தது

புகைரதங்களின் போக்குவரவை ஒரு கடல்பன்றி தடைசெய்ததென இதுகாறும் நாம் கேள்விப்படவில்லை. ஆனால் அப்படியான ஓர் சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை காலை மருதானைப் புகைரதஸ்தானத்தில் நிகழ்ந்தது. உயிருடனிருந்ததும் 10 அந்தர் நிறையுள்ளதுமான ஒரு பெரிய கடல்பன்றி புகைரதப் பாதைமீது குதித்து ஒரு மணித்தியாலமாகப் புகைரதங்களைத் தடைசெய்தது. அந்தக் கடல்பன்றி மூறட்டியிலுள்ள ஒரு வியாபாரிக்குப் பேசாலையிலிருந்து தலைமன்னார்ப் புகைரத மூலமாகக் கொண்டுபோகப்பட்டது. புகைரதம் மருதானை ஸ்தானத்தையடைந்ததும், அதிலிருந்து கடல்பன்றியை மூறட்டுக்குப் போகும் புகைரதத்தில் ஏற்றவேண்டியிருந்தது. இதற்காகப் புகைரதத்தினின்றும் அதிக பிரயாசத்துடன் அம்மிருகம் இறக்கப்பட்டு மேடையில் விடப்பட்டபொழுது அது தன் சிறகுகளை அசைத்து வாலை நிலத்திலடித்து 3-வது புகைரத மேடைக்குப் பக்கத்திலுள்ள பாதைமீது குதித்தது. அதினால் அப்பாதையில் செல்லும் புகைரதங்கள் தடைப்படலாயின. அம்மிருகம் உயிரோடிருந்தமையினால் புகைரத வாயில்காப்பாளர் அதைக் கயிற்றால் கட்டிக்கொள்ள முடியாதவர்களானார்கள். அப்படியிருக்கும்பொழுது புகைரதஸ்தான அதிகாரிகள், மூறட்டியிலுள்ள வியாபாரியை வந்து மிருகத்தை ஒப்புக்கொள்ளும்படி தந்திசொல்ல உத்தேசித்தார்கள். ஆனால அம்மிருகம் படிப்படியாக இடங்கொடுத்தமையினால் 1 மணி வரையில் புகைரத மூலமாக அனுப்பக்கூடியதாயிருந்தது.

---

## உலகிற் பெரிய கோபுரம்.

இவ்வுலகிலே மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்குள்ளே மிகவும் பெரியது எகிப்து தேசத்திலுள்ள "கித்ஸே பிரமிட்" என்னும் பிரேத கோபுரம் ஆகும். இது 5000 ஆண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டதாயினும் இன்னும் பழுதாகாமல் இருக்கின்றது. இதன் அடித்தலத்தின் விஸ்தீரணம் 4,80,000 சதுர அடி. பூமி மட்டத்திலிருந்து 480 அடி உயரம் உள்ளது. முழுமையும் பெரிய செங்கற்களாற் கட்டப்பட்டது. இரண்டிலக்ஷம் ஜனங்கள் இருபது ஆண்டு வேலைசெய்து இதனைக் கட்டி முடித்தார்கள்.

---

## ஆகாயரதமூலம் கடிதம் அனுப்புதல்.

இலங்கையிலிருந்து கடிதங்களனுப்புவதற்கு இப்பொழுது ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் கடிதங்களை எடுத்துச் செல்லும் ஆகாயரதங்களை உபயோகிப்பதற்காக ஒழுங்கு செய்யப்படுகின்றது. ஆகாயரதத்தில் அனுப்பப்படவேண்டிய கடிதங்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக ஆகாயரதம் புறப்படும் இடத்திற்கு அனுப்பப்படும். கடிதங்களை அனுப்பக்கூடிய ஆகாயரதங்களைப்பற்றியும் அதற்காகக் கொடுக்கப்படும் வேதனத்தைப்பற்றியும் காலத்துக்குக்காலம் தபாற்கந்தோர் அதிகாரிகளால் வெளியிடப்படும்.

---

## இந்து மனைவியின் பெருமை.

வங்காளத்தில் சொத்தெல்லாமிழந்து ஏழையாயிறந்துபோன ஒரு இந்து கனவானின் மனைவி, சில தினங்களுக்கு முன் தான் சிரமப்பட்டுச் சம்பாதித்த 2000 ரூபாவைக் கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் கட்டிக் கூறியதாவது:— "எனது புருஷன் வங்காள நாஷனல் வங்கியில் கடன்வாங்கியிருந்தார். காலகதியில் கடனைக் கொடுக்க முடியாதுபோயிற்று. இறந்துபோய்விட்டார். கடன் கொடுக்கும் காலம் தவறிவிட்டது. என்றாலும் எனது புருஷனின் ஆத்மக்ஷேமத்திற்காக இதைக் கோட்டார் ஏற்று வங்கிக்குச் சேர்த்துவிடவேண்டும்" இதைக் கேட்ட நீதிபதி ஆச்சரியமுற்றுப் பணத்தை ஏற்றாராம்.

---

## மயிலிட்டி தெற்குச் சைவ வாலிபர் சங்கம்.

சென்ற பிரபவஞ ஆடிமீ ௪உ சங்க ஸ்தாபகநட நிறைவுவிழா மகாதேவ வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. ஆறாம்வருட முதலாங்கூட்டம் மார்கழிமாசமே நடைபெற்றது. அதன் பின்னர் ஒவ்வொரு பூரணைதோறும் கிரமமாகக் கூட்டம் நடைபெற்றது. (பின்வரும் அட்டவணை அதனை நன்கு விளக்கும்: ஸ்ரீ வே. மகாலிங்கசிவம்-இந்துக்கள்கடமை, ஸ்ரீ பொ. சுந்தரசர்மா-அன்புநெறி, ஸ்ரீ சு. நடேசபிள்ளை-பகவத்கீதை, ஸ்ரீ சி. மா. தியாகராசா-கௌரிசரித்திரம், ஸ்ரீ சி. மா. தியாகராசா - காரைக்காலம்மை சரித்திரம், ஸ்ரீ நாகலிங்கசுவாமிகள் - தண்டியடிகள் சரித்திரம்) என்றென்றும் இச்சங்கம் தளர்வுறுவண்ணம் நடைபெறுவதற்காக வெளியூர் அங்கத்தவர்கள் இயன்ற பொருளுதவிசெய்யுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

கடித.

## இந்துசாதனக் காரியாலயப் புதுக்கட்டடம்.

சைவசமய வளர்ச்சி சாதிவளர்ச்சி தமிழ்ப்பாஷை வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஓர் ஞானசூரியன் போன்று சென்ற நாற்பது வருஷகாலமாக நின்று நிலவிவரும் இந்துசாதன இங்கிலிஷ் தமிழ்ப்பத்திரிகைகள் அச்சிடப்படும் சைவப்பிரகாசயந்திரத்துக்குப் புதிதாயமைத்த கட்டடத்தில் வருகிறகார்த்திகைமீ ௮உ பிரவேசஞ் செய்ய நிச்சயித்திருப்பதாக, சென்ற திங்கட்கிழமை வெளியான இந்துசாதன பத்திரங்களிற் பார்த்து அளவற்ற ஆனந்தமடைந்தேன். அடுத்தநாள் கட்டடத்தையும் பார்த்தேன். சுவர்களெல்லாம் கட்டியாயின. கிழக்குப்புறத்துக் கட்டடத்துக்கு அதாவது முழுக்கட்டடத்தில் மூன்றிலொன்றுக்கு வளைக்கால் நிராந்தி சுவர்த்திராந்தி முதலியன வைத்துக் கைமரங்களும் போட்டு ஓடும் வேய்ந்தாகிவிட்டது. இன்னும் இரண்டுபங்குக் கட்டடத்துக்கும் தேவையான தூண்கள் நிராந்திகளுக்கு வேண்டிய மரங்களெல்லாம் அரிந்து தயாராயிருப்பதாக அங்குநின்றவர்கள் சொன்னார்கள். ஆகவே அவற்றை வேலைசெய்து மேலேற்றுவதும் ஓடு வேய்வதும், சுவர்கள் பூசுவதும் நிலத்துக்குச் சீமேந்தால் "கொங்கிறீற்" போடுவதும் கதவுகள் ஜன்னற் கதவுகள் போடுவதும் மை பூசுவதும் பாக்கியாயிருக்கின்றன. இன்னும் 6000 ரூபா வரையிலுண்டானால் இவையெல்லாம் அடுத்த மாசமே நிறைவேறிவிடும். இங்ஙனமிருக்க "இப்போது ஓடு போட்ட பாகத்தை மட்டும் பூசி முடித்துப் பிரவேசஞ்செய்வதாயும் எஞ்சிய வேலையைப் பின் செய்வதாயும் எண்ணியிருக்கிறார்கள்" என்று அங்குநின்றார் ஒருவர் சொல்லக் கேட்ட என் மனம் பட்டபாட்டை எங்ஙனம் உரைப்பேன். அறிவால் நிறைந்த அறிஞர்களாகிய சைவபரிபாலன சபையாரின் பரிபாலனத்திலிருக்கும் இந்துசாதனத்துக்கு! முன்பின் 3000 பத்திராபிமானிகளின் ஆதரவிலிருக்கும் சாதனத்துக்கு!! சமயத்துக்கு, சாதிக்கு, தேசத்துக்கு, பாஷைக்கு, பங்கம் வருங்காலத்து கங்கணம் பூண்டு வாதாடும் சாதனத்துக்கு!!! வாழ்வில் வாழ்த்தியும் தாழ்வில் பிரலாபித்தும் நம் சீவியத்திலெல்லாம் தாமும் பங்குபற்றும் எங்கள் சாதனத்துக்கு அமைத்த கட்டடத்தை இனிது பூர்த்திசெய்யாது அரைகுறையில் பிரவேசஞ் செய்வது சாலாது! சாலாது!! சஞ்சைவ நன்மக்களே, இந்துசாதன அபிமானிகளே, விழியுங்கள்! யான் சொல்வதைச்சற்றே கேளுங்கள். இக்கட்டடத்தைப்பூர்த்திசெய்யாது அரைகுறையில் பிரவேசஞ் செய்யப்போகிறார்கள் என்று இடையிலுள்ள ஒருவர் சொல்லக் கேட்டேன். உண்மையாயிருக்குமோ என்று சந்தேகப்படுகின்றேன். உண்மையாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் நாமெல்லோரும் எங்களது என்று உரிமை பாராட்டும் பான்மையமைந்த இக்கட்டடத்தை இனிது பூர்த்திசெய்தல் சைவபரிபாலன சபையாரதும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களதும் கடமை மாத்திரமல்ல, விபூதி பூசும் சைவர்கள் ஒவ்வொருவரதும் கடமையே. இதற்காக ஆயிரக்கணக்காக ரூபாய்களைக் கொடுக்கும்படி நான் சொல்லவில்லை. சைவபரிபாலனசபை அங்கத்தவர் ஒவ்வொருவரும் தனித்தனி தங்கள் சக்திக்கு ஏற்றபடி ஒருதொகை உதவட்டும். பத்திராபிமானிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் வருமதியாயுள்ள பத்திரக்கிரயத்தை அனுப்பிவைப்பதோடு தங்கள் சுற்றத்தவராயும் நண்பராயும் இயல்புடையவராயுமுள்ள இன்னும் ஒருவரையோ பலரையோ இதற்குப் பத்திராபிமானியாக்கி ஒருவருஷக் கிரயத்தை முற்பணமாயுதவச் செய்தல் வேண்டும். இன்னும் விவாகம், புத்திரப்பேறு, கிருகாரம்பம், கிருகப்பிரவேசம், யாத்திரை, வியாதிநீக்கம், முதலிய வாழ்வு தாழ்வுகளில் அற்பமாகவேனும் ஒரு தொகை சமயபரிபாலினியாகிய இப்பத்திரிகைக்கு உதவிவருவார்களாயின் தொடங்கிய இக்கட்டிடம் இனிது பூர்த்தியாவதோடமையாது பத்திரிகைகளுக்கு ஆகவேண்டிய திருத்தங்களெல்லாம் செய்து இந்துசாதனப்பத்திரிகையைத் தினந்தோறும் வெளியாகச்செய்யலாம். இதன்றி இன்னும் எத்தனையோ புண்ணிய விஷயங்களெல்லாம் நடைபெறச் செய்யலாம். இவற்றிற்கெல்லாம் மூலம் அபிமானம், அபிமானமின்றி ஒன்றுமாகாது. இக்கங்கணத்தைக் கட்டிக்கொண்டோமானால் எக்கருமத்தையும் இலேசிலே நிறைவேற்றிவிடுவோம். அன்பர்களே இவையெல்லாவற்றையும் நன்றாகச் சிந்தித்து இத்தருணத்தைத் தவறவிடாது இனிது பூர்த்தியாக்குவது உங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். இக்காரியாலயம் நமது சமயத்துக்கு ஓர் கிரீடமாய் அஷ்டலக்ஷுமி வாசத்தோடு நாமகள் வாசமும் பொருந்தி நவநிதிகளுடன் எக்காலமும் தழைத்தோங்கும் பொருட்டும் இதற்குப் பொருட்கொடையினாலும் மனமுயற்சி சரீரமுயற்சியினாலும் உதவிசெய்த, செய்கின்ற புண்ணியவான்கள்பெருவாழ்வடையும்பொருட்டும் திருவருள் சுரக்கும்படி பன்றிக்குட்டிகளுக்குப் பாலருத்தியருளிய கிருபாசமுத்திரமாகிய சிற்சபா நடேசப்பெருமானது ஸ்ரீ குஞ்சித சரணத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

சி. திருச்சிற்றம்பலம்.

## விநாயகக்கடவுளைத் தியானித்துத் தேங்காயுடைக்கும்போது அறியும் நன்மை தீமை.

அடியது பருத்துமுடி குறுகிவட் டமதாகில்
ஆச்சமுக் கூறுமடியின்
அந்தசத் தோஷமாம் ஐந்திரண் டாயுடையில்
அளவிலாச் செல்வ முளதாம்
செடிநாம் பிருகோண மாகிலோ துன்புறும்
கிதாணமாம் வாழ்வுதானும் [டின்
நிறையோ டகன்றுதான் முட்டைபோலாகி
நீலாத் தினஞ் சேருமாம்
வடிவுசுக்கெட்டாகில் அரிசிலத்தியானமாம்
வட்டமா யுடையினன்றும் [முன்
மகாகண பதியின்முன் தேங்காயுடைக்கு
மகிழ்சுபா சுபச குணமாம்."

என்று கைலாயநாதர் சதகத்தில் கூறியபடி தேங்காயுடைத்தபோது, அடி பருத்து முடி சிறுத்து வட்டமாயிருந்தால் இலாபமுண்டாம். அடி மூன்றிலிரண்டுபாகமாயும், முடிபொருபாகமாயுமிருந்தால் சந்தோஷமுண்டாம். அடி ஒன்றிலிரண்டு பங்காயும், முடி மூன்று பங்குமாயிருந்தால் அதிக செல்வமுண்டாம். நாம்புக்கு நேராய் இரண்டு கோணலாக உடைந்தால் துன்பமுண்டாம். மேலே நீண்டு முட்டைபோலிருந்தால் பெருத்த அதிஷ்டமுண்டாகும். எட்டுச் சுக்கலாக இருந்தால் பெருங்கஷ்டமுண்டாம், சமமாக வட்டமாய் அடிப்புறம் காற்பாகமும் மேற்புறம் முக்காற் பாகமும் அல்லது இதற்கு மாறாகவும் உடைந்தால் கலகமுண்டாமென்றும் பொடிப் பொடியாக உடைந்தால் கருமக் கேடுண்டாமென்றும், கண்ணின் பக்கமாகவுடைந்தால் கர்த்தாவுக்குத் தீங்குண்டாமென்றும், முதன்மையான கண்ணின் நரம்பிலுடைந்தால் குருவுக்குத் தீங்குண்டாமென்றும், தென்புறக் கண்ணின் நரம்பிலுடைந்தால் கிராமமும் தனது வாசஸ்தானமுங் கெடுமென்றும் வடபுறக் கண்ணினையடுத்த நரம்பிலுடைந்தால் அரசனுக்குக் கேடுண்டாமென்றும், முகசந்திலுடைந்தால் தீமையுண்டாமென்றும், நீண்டுடைந்தால் பயமுண்டென்றும், உள்ளே இளநீர் (ஒல்லி) இல்லாதிருந்தால் மழை பெய்யாதென்றும், குடுமி (முடி) இல்லாதிருந்தால் தன நஷ்டமுண்டாமென்றும், தூர்க்கந்தமான இளநீரிருந்தால் செல்வ நாசமுண்டென்றும், அழுகி நாற்றமடித்தால் வைசூரியால் துன்பமுண்டாமென்றும் வருஷாதி நூல் முதலிய நூல்களிற் கூறப்பட்டிருக்கிறது. சாஸ்திர விதிக்கு மாறாக உடைந்தால் உடனே வேறு குற்றமில்லாத வேறு தேங்காயை யுடைத்து வழிபடுக.

தேங்காயுடைப்பவர்கள் அதிக இளங்காயையும் அதிகம் முற்றிய தேங்காயையும் நீக்கி மத்திமமான காயாக எடுத்து உடைத்தல் வேண்டும். கண்ணில்லாததும், மிகச் சிறியதும், மிகப் பெரியதும், அழுகியதும், தூர்க்கந்த முடையதும், கோணலுடையதும், குடுமியில்லாததும், நீர் வற்றியதும் (ஒல்லி), அதிக நீளமானதும், மழுமழுப்பில்லாததும், பின்னப்பட்டதும், மற்றும் பல குற்றமானவைகளை நீக்கவேண்டும்.

சிறு விரற் பிரமாணமான குடுமியுள்ள தேங்காயை எதிர்முகமாகப் பிடித்துக் கொண்டு முண்டிதமாயிராது ஆசாரமாகவிருந்து இஷ்ட தேவதாமந்திரத்தையுச்சரித்து ஒரேயடியில் இரண்டு பாதியாகும்படி உடைத்தல்வேண்டும்.

விநாயகக்கடவுளைத் தியானித்துச் சில சமயங்களில் சிதறுகாயடிப்பது எதற்கென்றால் பெருமானே, நான் தொடங்கிச் செய்யுங் கருமங்களில் வரும் விக்கினங்களெல்லாம் இத்தேங்காய் எவ்வாறு சிதறுண்டு கிடக்கின்றதோ அதுபோலச் சிதறுண்டுபோகவேண்டுமென்று தியானிக்குங் குறிப்புப் பொருளாம்.

இந்தேகத்திலுள்ள ஆணவாதி மலங்களால் வருங் குற்றத்தை இவ்வாறே சிதறுண்டு போகவேண்டுமென்று வழிபாடு செய்தலாம். இதுவுமோர் பிரகாரமாகப் பெரியோர் கொள்வர்.

தேங்காயுடைக்கும் தத்துவார்த்தத்தை முன் இப்பத்திரிகைவாயிலாகக்காட்டியிருக்கின்றோம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

---


## விசேஷ இனும்.

உயர்ந்த மிலிடேரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது. ஒன்று ரூபா ௩—௮. மூன்று வாங்கினால் 1 பட்டு மப்ளர் இனும் 6 வாங்கினால் ஒரு கம்பளிப் போர்வை இனும். இங்கிலீஷ் ட்வில் வெள்ளை ஷேர்ட் ரூ. ௨-4. உயர்தரத் துணி கைதேர்ந்தவேலை. உத்தரவாதமானதையலும் பொத்தான்களும். சாதாரண கடைஷேர்ட் அல்ல.

சுவிற்சர்லாந்தில் சித்திரமயமாய்ச் செய்யப்பட்ட அழகான 10வருட உத்தரவாதமுள்ள

ரோல்ட்கோல்ட் தங்க ரிஸ்லெட் கடிகாரம். விலை ரூ 10 தபாற்கூலி வேறு. இது வாங்குபவர்களுக்கு பட்டு, தொட்டிகாசிய பூச்சேலை இனும்.



உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O.,
Madra.

(Q. 112)

## அல்வாய்தெற்கு முத்துமாரியம்மன் கோயில்.

பரம்பொருளாய் உலகெலாம் பரவிநின்ற சைவமென்னும் முதலாம் பாசமயமிருளினீங்க, சொற்றமிழ்வுரைவழிநின்று திருஞான சம்பந்தப்பெருமான் தூயசைவந் தழைத்தோங்கச் செய்த திருமுலைப்பால், கார்த்தவிர்த்திய கார்த்திகேயன் திருப்புகழ் போற்றி.

சர்வ உலக செல்வ பாக்கிய லக்ஷ்மிகளாயார் கோயில் கொண்டருளும் புராதன தலங்களுளொன்றாகும் அல்வாய் முத்துமாரியம்மை யாலயம், யாழ்ப்பாணத்தின் வடபகுதியிற் கட்டைவேலி பகுதியைச் சார்ந்த அல்வாயென்னுங் குறிச்சியின் மத்திய பகுதியிலுள்ளது. இவ்வாலய கட்டடம் பழுதற்றிருந்தமையால் சென்ற அட்சய வருடம் ஆவணி மாதம் ஓர் மகாசபை கூட்டி அக்கூட்டத்தார் வைராக்கியத்தோடு திருப்பணியாக்க வேண்டுமென்று நிச்சயித்தபடியே மூலஸ்தானம், அர்த்தமண்டபம் ஆகிய இரு மண்டபங்களும் வேலை முற்றியபின் சென்ற ஆவணி மீ 6-ம் திகதி கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது. கும்பாபிஷேகச் செலவு முழுவதும் புலோலி ஸ்ரீ க. சுந்தரம்பிள்ளை யென்பவரே பொறுத்தனர்.

மூன்றும் மண்டப குறைவேலையாய் இருக்கிறது. அம்மண்டபம் மாத்திரம் முடிப்பதற்கு இன்னும் ரூபா 5000 வரையிற் றேவையென மதிப்பிடப்பட்டது. இத்திருப்பணிக்குப் பொருள் சேர்ப்பதற்கும் தொழில் நடத்துவித்தற்கு மேற்படி சபையோர் அல்வாய் ஸ்ரீ மயிலர் வல்லிபுரமும் ஸ்ரீ கணபதிப்பிள்ளை சுப்பையா வும் இன்னும் இவர்களுக்குத் துணையாய் வேறுஞ் சிலருமாகும் மலாய்நாட்டிற் சேர்க்கவும் சிலர் நியமிக்கப்பட்டனர். சிற்க இத்திருப்பணி தொடங்கி ஏறக்குறைய இரண்டு வருடங்களாகின்றன. திருப்பணிச் சபையார் கூட்டங்களும் மூன்றிற்குமேல் நடந்தன. இத்திருப்பணிக்குப், பொருளுதவிபுரிவோர்களாகவும் செலவுக் கணக்கு அறிய ஆவலாயிருக்கிறார்கள். ஆனால் இக்கூட்டத்தினரின் அவட்சியத்தாலோ இன்னும் அது வெளிவரவில்லை. இக்கணக்கு வெளிவராமையால் இன்னுமொரு இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. அதென்னவெனிற் பணஞ் சேகரிக்க அதிகாரமில்லா வேறு சிலருஞ் சனங்களை ஏமாற்றிப் பணம் பறித்து வருகின்றனரென்றும் வதந்தியாகும்.

ஆகையாலிதன் சரியிறைகளை யறிதற்கும் சனங்களின் சந்தேகத்தைத் தீர்த்தற்கும் சாதனமாவது, பணமுபகரித்தவரின் பெயர் தொகை, செலவுக்கணக்கு முதலிய விபரங்கள் துண்டுப்பத்திரங்கள் மூலமேனும் பத்திரிகை மூலமேனும் வெளிவரச் செய்தலேயாகும். இத்திருப்பணிக்குப் பெருந்தொகைப் பணங் கொடுக்கவிருக்கும் அறிஞர் பலர் இவ்வதிகாரிகள் கணக்கை வெளியிடாததற்கு முகாந்திரங்களின்னவின்னவெனச் சில நியாயமான கதைகள் சொல்கின்றனர். அவைகளையெல்லாமிங்கே வரையப்புகின் காரியக்கேடாகுமென அஞ்சிவிடுகிறேன்.

ஆகையால் இத்திருத்தொண்டை மேற்கொண்ட அன்பர்கள் திருப்பணி நிறைவேறித் தேவியருளைப் பெறவேண்டுமேல், அறிஞர் மனம் கோணாவகை யொழுகி, பிற இடங்களில் அறிஞர் பொதுத்தருமம் நடக்கும் முறையை அனுசரித்து அவ்வாறு தாமுமிதனை நடத்தி, கலாக்கோலமன்ன நீதியுடையராய், கோயிற்சொத்தை அதுவாகவே மதித்துத் தர்விநியோகஞ் செய்யாது அதன் கணக்கு விஷயத்தை எவருமறியும் வண்ணம் பகிரங்கப்படுத்தல் வேண்டும். பொதுவிஷயங்களிற் றொடர்புடையவர்களுக் கிடையில் மனஸ்தாபமேற்படுமேல் காரியங்கள் பழுதடையுமென்பது அறிஞரபிப்பிராயம். அங்ஙனமாதலினவ்வாறேற்படாதிருப்பதுடன் இத்திருப்பணி விஷயத்திலும் சேரும் பணத்தைப் பயன்படுத்தும் முறையை வரையறுத்தேன். எல்லாம் வல்ல எம்பிராட்டியம்மை யருளுஞ் சரியாய் நடத்தற்காக மதியை யீந்தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

அல்வாய் வடக்கு, இங்ஙனம்,
27—8—28. கா. ப. சுப்பையா.

## கண்டிக் கதிரேசன் கோயில் வைபவம்.

தங்கடம்பனைப்பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடனடியேனையுந் தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே.

கண்டிக் கதிரேசன் கோயில் என்று சொல்லப்படும் இவ்வாலயம், மிகப் பூர்வீகமானது என்பது யாவரும் அறிந்த விஷயமேயினும், ஒரு சிலரே அது எப்போது, யாரால், எச்சமயத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நன்கு அறிவர். கண்டிமாநகரிலும், மற்றைய இடங்களிலும் நிறைந்துள்ள சிவநேய, குகநேயச் செல்வர்கள் யாவரும் இனிது அறியும் பொருட்டு, ஆன்றோர்வாய்க் கேட்டவாறு, கண்டிமாநகரில் எம்பெருமான் கோயில்கொண்டருளிய வரலாற்றை, கணேசபிரான் திருவருளை முன்னிட்டு இயன்றளவு சுருக்கிக் கூறுவாம்.

சற்று ஏறக்குறைய 700 வருஷங்களுக்கு முன்னே, நரேந்திர சிங்கன் என்னும் ஓர் அரசன், இந்தியாவிலே சோழ தேசத்திலிருந்து இவ்விலங்காதீபத்துக்கு வந்து, அக்காலத்து இராசதானியாகிய அநுராசபுரத்தைக் கைப்பற்றி, அங்கிருந்து காட்டுத் தம்பளை வழியாக இக்கண்டிமாநகரத்தை அடைந்து, சிங்கள மன்னனைச் செயித்து, அம் மன்னனுடைய மகளை விவாகஞ் செய்து கண்டி நகரை அரசு புரிந்து வந்தான்.

இம் மன்னனுக்கு இரு குமாரர்கள் இருந்தார்கள். மூத்த இராச குமாரன், அக்காலத்தில் மதுரையம்பதியை அரசு செய்து வந்த திருமலைநாயக்கருடைய குமாரத்திகளில் ஒருவரை விவாகஞ் செய்து, அவளைக் கண்டிமாநகரத்துக்கு அழைத்து வந்து, இவ்விராசதானியில் அரசு புரிந்து இருக்கும் நாளையில், அவ்வரசி திருப்பரங்குன்றில் எழுந்தருளி இருக்கும் பால சுப்பிரமணிய சுவாமியில் அதிகம் அன்பு பூண்டவளாயிருந்த படியால், அந்த மூர்த்தியை இவ் விராசதானியில் பிரதிஷ்டை செய்து தர வேண்டும் என்று, அரசனை மிகவும் வேண்டி நின்றாள். அரசனும் அவ்வேண்டுகோளுக் கிணங்கி, தமது மந்திரி பிரதானிகளுக்குச் சுப்பிரமணிய ஆலயம் ஒன்று ஸ்தாபிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். இக் கண்டிமாநகரத்தில் அவ்வாலயத்தை, எவ்விடத்தில் ஸ்தாபித்துப் பால சுப்பிரமணிய மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து, தம் மனக் கோரிக்கையின்படி வழிபடலாம் என்று எண்ணமே, தன் சித்தத்தில் குடிகொண்டவளாயிருந்த அவ்வரசியின் சொப்பனத்திலே கலியுகவரதரும், வேண்டுவார் வேண்டுவதே ஈபவருமாகிய பாலசுப்பிரமணியப்பெருமான் தோன்றிப் பின்வருமாறு அறிவுறுத்தினார்.

"உன் பட்டத்து யானையைக் கம்பத்தினின்றும், அவிழ்த்து விடுவையேல், அந்த யானை எவ்விடத்தில் போகும் போது, ஓர் முயலானது தன் இருப்பிடத்திலிருந்து வந்து அந்த யானையின் வாலைப்பிடித்து இழுக்குமோ, அம் முயல் இருந்து புறப்பட்ட அவ்விடமே நாம் உன் வேண்டுகோளுக்கு இரங்கிக் கோயில்கொண்டெழுந்தருளுமிடமென அறிவாயாக".

அரசி நித்திரை விட்டெழுந்து, பெருமானருளைத் துதித்து, கண்ணீரும் கம்பலையுமாய், அரசனுக்குச் சொப்பனத்தின் விபரத்தை அறிவித்தாள். அரசனும், அவ்வண்ணமே பட்டத்து யானையைத் துணைக்கொண்டு அந்த யானையின் வாலைப்பிடிப்பதற்கு முயல் இருந்து புறப்பட்ட இடத்தைத் தீர்மானித்து, இந்த அதிசய அற்புதத்தினால் பால சுப்பிரமணியப் பெருமானின் கருணைப் பிரவாகத்தில் தான் பெரிதும் ஈடுபட்டவனாய், பெருமானது கோயில் இனிது முடிவதற்கு ஆகவேண்டிய முயற்சிகள் எல்லாம் ஏற்படுத்தினான். ஆலயத் திருப்பணி முடிந்ததும் பால சுப்பிரமணியத் திருவுருவத்தையும் கோயில் பிரதிஷ்டை செய்யும் ஆசாரியர் முதலியோரையும் மதுரையம்பதியிலிருந்தே அழைப்பித்தார்கள்.

கோயில் ஆதிமூலத்தில் எழுந்தருளி இருப்பதுவும், பத்தி செய்யும் அடியார்களுடைய மனத்தையும் கண்களையும் ஒருங்கே கவர்வதும் பெரியபுராணத்திலே,—

> ஐந்துபேரறிவும் கண்களேகொள்ள
> அளப்பருங் கரணங்கள் நான்கும்
> சிந்தையேயாகக் குணமொருமூன்றும்
> திருந்துசாத்துவிகமேயாக
> இந்துவாழ்சடையான் ஆடும் ஆனந்த
> எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
> வந்தபேரின்பவெள்ளத்துள் திளைத்து
> மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்தார்.

என்பதற்கு இலக்கியமாக அமைந்துள்ளதுமான திரு உருவம், ஏறக்குறைய அறுபதினாயிரம் ரூபா பெறுமதி உள்ளதென்று சொல்லுவார்கள். ஆனால் பூஜா காலங்களில் விசேஷமாகச் சாயரக்ஷை அர்த்தசாமங்களில் எம்பெருமானைப் பூசித்து ஆனந்தம் அடைந்தவர்கள், இத் திரு உருவம் இப் பெருந்தொகைப் பொன்னினால் அமைந்ததல்ல, அரசியின் அளவிறந்த அன்பினாலும் சுப்பிரமணியப் பெருமானுடைய பெருந்திரு அருளினாலும் அமைந்த ஓர் திவ்விய ரூபம் என்று சொல்லிப் பாராட்டுவார்கள். முருகன் என்னும் பதத்திற்கு என்றும் அழியாத இளமைக் கண் கவரும் வனப்பு என்னும் பொருள் கொள்ளும் அறிஞர்கள், இத் திவ்விய திரு உருவத்தில் சாந்நித்தியமாயிருக்கும் பெருமானைப் பூஜாகாலங்களில் அன்புடன் தரிசிக்கும் அரும் பெரும் பேற்றைப் பெறின், தாம் கூறிய இலக்கணங்களுக்கு இலக்கியம் இங்கே அமைந்துள்ளதென்று ஒருங்கே துணிவர்.

கோயிற் பிரதிஷ்டையான காலந்தொடங்கி, கண்டிமாநகரத்தைக் கடைசியாயாண்ட ஸ்ரீ விக்கிரம இராசசிங்க இராசாவின் காலம் வரைக்கும், ஒருவரின் பின் ஒருவராக அரசாண்ட எல்லாவரசரும், அப் பெருமானை வழிபட்டு அவருடைய அருளைக் கொண்டே இராச்சிய பரிபாலனஞ் செய்து வந்தார்கள். ஸ்ரீ விக்கிரம இராசசிங்கம் தம்முன்னோரின் வழிப்படியே இப்பெருமான் ஆலயத்துக்குச் சென்று, மெய்யன்போடு வணங்கித் துதித்து, ஆதி மூலத்திலிருந்து இப்புறம் இரண்டாம் வாசல் வரைக்கும் இடப்பட்டிருக்கும் திரைகளுக்கு இப்பால் நின்று, இராச்சிய பரிபாலன விஷயங்களை இட்டுப் பெருமான் திரு அருட் குறிப்பை யிரந்து நிற்க, அப்பெருமான் திருவுள்ளம் இரங்கி இராசனுக்கு அசரீரி வாக்கால் ஆஞ்ஞாபித்து அருளுவர் என, ஆன்றோர் கூறுவர். இவ்வண்ணம் பெருமானின் திரு அருளுக்குப் பாத்திரமாகவிருந்த ஸ்ரீ விக்கிரம இராச சிங்கனும்,

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான் முந்துறும்"

என்றதற்கிணங்கக் கொலைப்பாதகங்களுக்குக் காரணனாகிய திரு அருளுக்கு அயலாகி, இராச்சியமிழந்து துன்புற்றான் என்பது உலகமறிந்த விஷயமே.

இப் புராதன ஆலயத்துக்கு இதை ஸ்தாபித்த இராசனே விஸ்தாரமான பூஸ்திதிகளை நித்திய நைமித்திக பூசைகளுக்காக நியமித்து இருக்கிறான். இப் பூஸ்திதிகளுக்குள்ளே அடங்கிய தோட்டங்கள், நிலங்கள், கடைகள் முதலியனவைகள் எல்லாம், இலங்கைப் புத்தாலய நிருவாக சட்டத்தினால் நியமிக்கப் பட்ட நிருவாக சபையாரின் ஆளுகைக்குட்பட்டிருக்கின்றன. இந்த ஆதனங்களில் இருந்து பெருந்தொகையான பணம் வந்தபோதிலும், கோயில் நித்திய நைமித்திக பூசைகளுக்கு ஒரு சிறிதும் பயன்படாதிருப்பது, இவ் விஷயத்தை அறிந்த ஒவ்வொருவருக்கும் துன்பத்தைக் கொடுக்கும். இப்பொழுது இக்கோயிலில் உஷக் காலப்பூசையும், காலப் பூசையும், திருவாளர்கள் வை ஆ. மயில்வாகனம். வை. சி. குமாரசுவாமி ஆகிய இவர்களின் பொருள் உதவி கொண்டும், சாயரக்ஷை திருவாளர்கள் வ. இ. ரு. ம. வைரவன் செட்டியார் மு. ப. ரு. பழனிச்செட்டியார் ஆகிய இவர்களின் பொருள் உதவி கொண்டும், அர்த்தசாமப்பூசை திருவாளர் பி. தி. மு. வேலாயுதன் செட்டியாரின் பொருள் உதவி கொண்டும் நடக்கின்றன. உச்சிக்காலப்பூசை இப்பொழுது கோயிற் பூசகராயிருக்கும் குருக்கள் அவர்களே, தம் செலவில் நடத்தி வருகிறார் என அறிகிறோம். பூசாகாலங்களிலே சுவாமிக்கு நிவேதிக்க வேண்டிய நைவேத்தியங்களைப் பாகம் செய்வதற்கு எல்லாக் கோயில்களிலும் அமைந்துள்ள மடைப்பள்ளி, இக்கோயிலில் இல்லாதிருப்பதைக் கண்டும், இதை நடாத்தும் கடமைபூண்ட புத்தாலய நிர்வாக சட்ட சபையார் பாராமுகமாயிருப்பது, இச்சபையார் இக்கோயில் அபிவிர்த்தியில் எவ்வளவு கருத்தற்றிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக்குகின்றது.

இது மாத்திரமன்று. கோயில் வெளி வீதியிலுள்ள கடைகள் இக்கோயிலுக்கே உரியனவாக இருந்தும், அக்கடைகளில் கோயில்மனைச்சர் மற்சமாமிசம் வைத்து விற்க உத்தரவு கொடுத்திருப்பதால், நறுமணம் கமழும் நந்தாவனத்திற்குப் பதிலாக, புலால் நாற்றம் வீசும் புலையர் வீதியை ஒக்க அமைந்தனவாயின. சைவக்கோயில்களின் வீதிகளில் இவ்வண்ணம் இடங்கொடுத்தல், அதிபாதகச் செயலென அறிந்தோரால் கொள்ளப்படும். இப்பாவச்செயலின் பயனாகவோ, அல்லது எம்பெருமானின் தண்டனையாகவோ 'பிளேக்' நோய் கண்டிநகரில் தோற்றிய இருமுறையிலும் இக்கோயில் வீதிகளுக்குள்ளேயே தோற்றியது, கண்டிமாநகரில் உள்ள எல்லோரும் அறிந்த விஷயம். இவ்வண்ணம் கோயில் வீதிகளில் உள்ள அநாசாரங்களையும் மற்றும் குறைகளையும் கண்டிருந்தும், இருமுறையும் 'பிளேக்' நோய் தொடங்கிய காரணத்தை யறிந்திருந்தும், இன்னும் சைவசன்மக்கள் பாராமுகமாயிருப்பரேல் சுப்பிரமணியப் பெருமானுக்கு அவர்கள் இயற்றும் அபராதம் சிறிது இல்லை எனலாம். ஆனதன்மையினால், சைவசன்மக்களே! குகநேயச் செல்வர்களே! பத்திசிகாமணிகளே! தூக்கத்தை விட்டு எழுமின், சுப்பிரமணியப் பெருமான் கோயில் அடைந்திருக்கும் நிலையை உற்றுப் பார்மின், சற்றுநேரம் மனத்தைப் பிறிதொன்றின்மேல் செல்லவிடாது அவன் அருள்வழி நிறுத்தி, நங்கடமை என்னை எனச் சிந்தியுமின், விக்கின விநாயகப் பெருமானை முன்னிட்டு, இக்குறைகளைத் தீர்க்க முயற்சிசெய்மின், எல்லாம்வல்ல இறைவன் அருள் உங்கள் முயற்சிக்குத் தக்க சித்தியைக் கொடுக்கும்.

கண்டி, இப்படிக்கு,
8—7—28. சு. செல்வநாயகம்,

---

## சைவ அநாதப் பிள்ளைகள் சாலையும் மாணவர் இல்லமும்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அநாதப்பிள்ளைகள் எல்லோரும், தமிழ் ஐந்தாந்தரம் அல்லது அதற்குமேற்பட்ட வகுப்புகளிற் சித்தியடைந்த ஏனைய மாணவர்களும் இச்சாலையிற் சேரலாம்.

இப்பிள்ளைகள் திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கப்படுவர்.

பிரதான நோக்கம்.

1. தராதரம் பெற்ற உபாத்தியாயராக்கல்.
2. கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குத் தகுதி உடையவராக்கல்.
3. பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டிதபரீட்சைகளுக்குத் தகுதியுடையவராக்கல்.
4. சமத்தொழில் நெசவுத்தொழில் முதலிய கைத்தொழில்களிற்றேர்ச்சியுடையவராக்கல்.

அநாதப்பிள்ளைகளுக்கு வேதனமின்றி உணவளிக்கப்படும். ஏனையோர் விடுதிச்செலவில் ஓர் பகுதியாவது கொடுத்தல்வேண்டும்.

(M 69) ச. சபாபதிப்பிள்ளை. திருநெல்வேலி,
சு. இராசரத்தினம், சைவவித்தியாவிருத்திச் சங்கம்

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவோச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் வண்ணார்பண்ணை ச. செ த. செ செல்லையாபிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆண்டு ஜூலை மீ

| இல | உ | ரூ | |
|---|---|---|---|
| 3395 | 1 | 40 | பருத்தித்துறை சின்னத்தம்பி சாமிநாதர் கல்வைத்த மோதிரம் 1 தாலி 1 குமிழைப்பவுண் 2 |
| 3922 | 7 | 17 | மானிப்பாய் கணபதி சதாசிவம் சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 |
| 3973 | 16 | 70 | ஆரியகுளம் வி த மா அருளானந்தம் முகப்புக்கு கல்வைத்த செட்டிக்கொலிசு சோடி 1 |
| 4036 | 26 | 40 | பருத்தித்துறை சின்னத்தம்பி சாமிநாதர் சாதாக்கம்பிப்பூசாணட்டியல் 1 |
| 4045 | 27 | 80 | சுதுமலை வேலாயுதர் சுந்தரமுத்து பட்டணக்காப்பு சோடி 1 |
| | | | ஆகஸ்டு மீ |
| 4078 | 2 | 25 | பருத்தித்துறை சின்னத்தம்பி சாமிநாதர் மஞ்சள்சிதப்புக் கல்லட்டியல் 1 |
| 4086 | 4 | 160 | கன்னாதிட்டி அப்பாக்குட்டி சுப்பிரமணியம் சாதா தாலிச்சங்கிலி 1 |
| 4090 | „ | 100 | „ „ „ சாதா கொலிசுக்காப்பு சோடி 1, கைச்சங்கிலி 1 |
| 4103 | 8 | 30 | கோப்பாய் ஆறுமுகம் துரையப்பா முகப்புக்குக் கல்வைத்த கைச்சங்கிலி 1 |
| 4117 | 9 | 100 | பருத்தித்துறை சின்னத்தம்பி சாமிநாதர் கண்டசரம் 1, பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 4120 | 10 | 18 | வேலணை சுந்தையா செல்லையா சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 |
| 4121 | „ | 10 | கொழு புத்துறை கந்தா முத்துத்தம்பி கல்குத்தி சோடி 1 |
| 4127 | „ | 75 | நீர்வேலியடி இளையதம்பி சிதம்பரப்பிள்ளை சாதா தாலிச்சங்கிலி 1 |
| 4137 | 17 | 30 | மானிப்பாய் வல்லிபுரம் சுந்தரம் சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 |
| 4158 | „ | 45 | வேலணை நாகநாதர் சபாபதிப்பிள்ளை கல்வைத்த சாதா கொலிசுக்காப்பு சோடி 1 |

விற்பனவு:—விபவ ஆண்டு புரட்டாதி மீ 16 திகதிக்குச் சரியான (1—10 28) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஏடுபட்ட நகை பிறிதுக்கவாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

(Mis 1293) செ. இருப்பிள்ளை உடையார்,
வெற்றிவேலர்.

---

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்டவைகள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வன்பரிபாலனரவர்களால் யாழ்ப்பாணம் விறகு காலையில் 1928-ம் ஆ ஐப்பசி மீ 12உ வெள்ளிக்கிழமை விற்கப்படும்.

I 150 பாலைமரங்கள்
II 15 முதிரைமரங்கள்
III 5 தொன் முதிரைத்துண்டுகள்
IV 2 தொன் கருங்காலித்துண்டுகள்
V ஒவ்வொன்றிலும் 25 தொன் அடங்கிய நாலு தவியல் விறகு
IV 34 அரிந்த பாலை கட்டமரக் கம் பலகை

ஏனைய விபரங்கள் 1928ஆ புரட்டாதி மீ 14உ வெளியாகும் நொ. 7663-ம் கசற் பத்திரிகையிலறியலாம்.

J. D SARGENT,
வன்பரிபாலனர்,

வனபரிபாலனர்கந்தோர்,
கண்டி, 7—9—1928.
(G 963)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.